# இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அவர்களின் பத்திரிக்கை செய்தி

சமூகப்பாதுகாப்புத்துறையின் கீழ் இயங்கும் இராணிப்பேட்டை சிறுவருக்கான அரசினர் குழந்தைகள் இல்லத்தில் தங்கியிருக்கும் சிறார்களுக்கு ஆற்றுப்படுத்துநர்கள் மூலம் மதிப்பூதியம் அடிப்படையில் ஆற்றுப்படுத்துதல் சேவை வழங்கி தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இப்பதவிக்கு தகுதியான உளவியல் மற்றும் ஆற்றுப்படுத்துதலில் முதுகலை பட்டம் பெற்ற நபர்கள் அவர்களது விண்ணப்பங்களை உரிய சான்றின் ஒளிநகலுடன் 02.02.2021 மாலை 5 மணிக்குள் கீழ்குறிப்பிட்ட முகவரிக்கு வந்து சேரும் வண்ணம் விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது. தகுதியான நபர்களிடமிருந்து பெறப்படும் விண்ணபங்கள் தேர்விக்குழு மூலம் நேர்முக தேர்வு அடிப்படையில் மூன்று ஆற்றுப்படுத்துநர்கள் (இவர்களில் ஒரு பெண் ஆற்றுப்படுத்துநர் இருக்க வேண்டும்) தெரிவு செய்யப்படுவர்.

தெரிவு செய்யப்படும் ஆற்றுப்படுத்துநர்களுக்கு அவர்களின் வருகையின் அடிப்படையில் ஐந்து மாதத்தில் 70 நாட்களுக்கு (ஒரு ஆற்றுப்படுத்துநர் 24 வருகைக்கு மிகாமல்) மதிப்பூதிய அடிப்படையில் ஒரு வருகைக்கு போக்குவரத்து செலவு உட்பட ரூ.1000/- வழங்கப்படும். மேலும் விவரம் வேண்டுவோர் 04172- 272506 என்ற எண்ணிற்கு தொடர்பு கொண்டு தெளிவு பெறலாம்.

விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி

கண்காணிப்பாளர்,

சிறுவருக்கான அரசினர் குழந்தைகள் இல்லம்,

இராணிப்பேட்டை- 632 401.

ஆணைக்காக

மாவட்ட ஆட்சியர்

இராணிப்பேட்டை

மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர்.